# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இந்திய நன்கொடை ஆதரவுடன் குருநாகலில் அமைக்கப்பட்ட பதினி கம மாதிரி கிராமம் அங்குரார்ப்பணம்</u>

குருநாகல் பதினி கம மாதிரி கிராமத்தை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ டாக்டர் சுசில் ரணசிங்க ஆகியோர் 2026 ஜூன் 04 ஆம் திகதி கூட்டாக அங்குரார்ப்பணம் செய்துவைத்து 24 பயனாளிக் குடும்பங்களிடம் கையளித்தனர். இந்த நிகழ்வில் வட மேல் மாகாண ஆளுநர் கௌரவ திஸ்ஸ குமாரசிறி வர்ணசூரிய மற்றும் கௌரவ மகளிர் மர்றும் சிறுவர்கள் விவகார பிரதி அமைச்சர் டாக்டர் நாமல் சுதர்ஷன, பாராளுமன்ற உறிப்பினர் இந்திக்க திஸ்ஸநாயக்க உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

2. வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் அதிகாரிகள் தேசிய வீடமைப்பு அதிகாரசபை தலைவர் மற்றும் அதிகாரிகள், குருநாகல் மாவட்ட நிர்வாக அலுவலக அதிகாரிகள் உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

3. இங்கு உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இலங்கையின் தேசிய அபிவிருத்திக்காக இந்தியா கொண்டுள்ள நிலைபேறான அர்ப்பணிப்பு தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தார். உள்ளூர் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளித்தல் மற்றும் இலங்கை முழுவதுமுள்ள சமூகங்களின் முழுமையான வளர்ச்சிக்காக ஆதரவளித்தல் ஆகியவற்றில் இந்தியா தொடர்ந்தும் ஒரு நிலையான பங்காளியாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

4. இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவித் திட்டத்தின் கீழ் இலங்கையின் கிராம & நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு & நிர்மாணத்துறை அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் உள்ள 25 மாவட்டங்களிலும் குறித்த மாதிரி கிராம வீடமைப்புத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருந்தது. இத்திட்டத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையானது இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் 600 குடும்பங்களுக்கான வீட்டு வசதிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 24 வீடுகளைக் கொண்ட மாதிரிக்கிராமத்தில் வழங்கப்படுவதுடன் இப்பயனாளிக் குடும்பங்கள் மாவட்ட வீடமைப்பு சபைகளால் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

5. இதுவரை இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், கண்டி, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, மாத்தளை, புத்தளம், கொழும்பு, திருகோணமலை, மொனராகலை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய 17 மாவட்டங்களிலும் ஏற்கனவே திறந்துவைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் 98.5 வீதமான பகுதி நிறைவடைந்திருக்கும் நிலையில் மீதமுள்ள மாதிரிக்கிராமங்களும் வெகுவிரைவில் திறக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

****

**கொழும்பு**
**05 ஜூன் 2026**